ரெலிகொம்

மொபிடெல்

<u>**மொபிடெல் (பிறைவேற்) லிமிடெட் இன் சேவைகளுக்கான பொது நியதிகளும் நிபந்தனைகளும்**</u>

இல:108 டபிள்யு.ஏ.டி. ராமநாயக மாவத்தை, கொழும்பு 2, இலங்கை

இந்த பொது நியதிகளும் நிபந்தனைகளும் (பொநிநி) மொபிடெல் பிறைவேற்) லிமிடெட் (இதன் பின்னர் மொபிடெல்) தாபனத்தினதும் சந்தாதாரரினதும், பின்னால் வரைவிலக்கணப்படுத்தப்படும் சேவைகளின் ஒப்படைப்பு மற்றும் சேவைகளின் பாவனை என்பனவற்றின் பணிப்புரிமைகளையும் கடப்பாடுகளையும் வரையறுத்து காட்டுகின்றது. இந்த பொநிநி இன் தொடர்பாடலுக்கான முன்னிலை வழிமுறையானது மொபிடெல் உத்தியோகபூர்வ வலைக்கடப்பிடத்தின் ஊடாக அறிவித்தல் செய்வதாகும். இரண்டாவது வழிமுறையானது கிடையுறவு சார்ந்த குரல் பதில் (இகுப-IVR) தொழில் நுட்பவியல் மார்க்கமாக வேண்டும்.


| | |
|---|---|
| 1. வரைவிலக்கணங்களும் தெளிவுரைகளும் | 1 |
| 2. செல்லுபடியாந்தன்மையின் காலவரையறை | 2 |
| 3. கட்டணங்கள் மற்றும் சேவை வரவுகள் | 2 |
| 4. பண வைப்பு | 3 |
| 5 .சந்தாதாரரின் கடப்பாடுகள் | 3 |
| 6. மொபிடேல் தாபனத்தின் உரிமைகளும் கடப்பாடுகளும் | 3 |
| 7. தரவு பாதுகாப்பு மற்றும் அந்தரங்கம் | 4 |
| 8. சர்வதேச திரிதல் சேவை | 4 |
| 9. பாவிக்கப்பட்ட இணைப்புக்களை பணியிட மாற்றம் | 5 |
| 1□. மாற்றங்கள் | 5 |
| 11. தற்காலிக நீக்கம் / செயலிழப்பு / சேவை நீக்கம் | 5 |
| 12. சேவை நீக்கம், தற்காலிக நீக்கம் மற்றும் செயலிழக்கச் செய்தல் வேளைகளின் போது சந்தாதாரரின் பொறுப்புக்கள் | 5 |
| 13 . வலோத்கார தடைகள் | 5 |
| 14. ஆளுமைச் சட்டங்கள் | 6 |
| 15. ஒப்படைக்கப்பட்ட பணி | 6 |
| 16 நானாவிதம் | 6 |

1. வரைவிலக்கணங்களும் தெளிவுரைகளும்.

1.1. **‘கணக்கு’** எனக்கருத்துபடுவது, ஒரு மொபிடெல் சந்தாதாரருக்கு மொபிடெல் சேவைகளின் பொருட்டும் ஒரு சந்தாதாரரின் ஆள்நிலை தரவை முகாமைத்துவப் படுத்துவதற்குமாக ஒதுக்கப்படும் ஓர் பதிவாகும்.

1.2 **‘உடன்படிக்கை’** எனக் கருதப்படுவது சந்தாதாரரது விண்ணப்பபடிவம்/கள், பொது நியதிகளும் நிபந்தனைகளும், காலத்திற்கு காலம் வெளியீடு செய்யப்படும் விசேட விலை அறிவிப்புக்களுமாகும். ஒரு சந்தாதாரர் பதிவு செய்யும்பொழுது அல்லது ஒரு கணக்கை/ ‘சிம்மை’ செயலாக்கம் செய்யும்பொழுது, மொபிடெல் சேவைகளைப் பாவிக்கும்பொழுது, எது முதல் செயற்படுமோ அதுவாக ஒரு உடன்படிக்கையானது ஒரு சந்தாதாரரிற்கும் மொபிடெல் தாபனத்திற்கும் இடையில் ஏற்பட்டுவிட்டதாகக் கருதப்படும்.

1.3 **‘விலைப்பட்டியல் சுழற்சி’** என்பது சந்தாதாரரினால் பாவிக்கப்பட்ட மொபிடெல் சேவைகளின் பொருட்டு மொபிடெல் தாபனத்தினால் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள்ளான கடடணக்கணிப்பு எனக் கருதப்படும்.

1.4 **’கட்டணங்கள்’** என்பது, ஏதாவது இணைப்பு மற்றும் விசேட விலை அறிவித்தல் உட்பட சேவையினைக் காலத்திற்குக்காலம் பாவிப்பதற்கு ஏற்புடைத்தான கட்டணங்கள் எனக்கருதப்படும். தற்போதைய கட்டண விபரம் **http/www.mobitel.lk** என்னும் இணையதளத்தில் உள்ளது.

1.5 **‘இணைப்பு’** என்பது மொபிடெல், தாபனத்தினால் ஏற்பாடாக்கப்பட்ட ஒரு ‘சிம்’, கட்டணங்களின் நிகராயிருப்பின் பொருட்டு உருப்படுத்தப்பட்ட ஒரு செயற்திட்டத்துடன் வலையமைப்பில் இணைக்கப்படுவதாகும்.

1.6 **‘கடன் வரம்பு’** என்பது. விண்ணப்பபடிவத்தில் குறிப்பிடப்பட்டவாறு அல்லது காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டதன் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்கு ஒரு சந்தாதாரருக்கு மொபிடெல் தாபனத்தினால் வழக்கப்படும் அதிகூடிய வரம்பெல்லை ஆகும்.

1.7 **‘வாடிக்கையாளர் அக்கறை’** எனக் கருதப்படுவது, சேவைகளின் பொருட்டான ஏதும் தகவல்களை அறியும் பொருட்டு ஒரு சந்தாதாரர் தொடர்பு கொள்ளக் கூடியதான மொபிடெல் தாபனத்தின் ஓர் பிரிவாகும்.

1.8 **‘கருவி’** எனக் கருதப்படுவது, மின்னணுச் சமிக்கைகளை அனுப்பும் மற்றும் ஒலி / ஒளி வாங்கிகளை பெறும் ஓர் துணைக்கருவி ஆகும். இதன் மூலம் மொபிடெல் தாபனம் சந்தாதாரர்களுக்கு அதன் சேவைகளை வழங்குகின்றது.

1.9 **‘தவணைத் திகதி’** என்பது, மொபிடெல் தாபனத்திற்கு வாடிக்கையாளர் மிகுதியாகக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கொடுப்பனவு ஏதும் செலுத்தப்படவேண்டிய இறுதித் திகதியாகும். ‘இகுதொ’. (IVR) என்பது, இடையுறவு சார்ந்த குரல் பதில் தொழில் நுட்பவியலைப் பாவித்து மொபிடெல் தாபனத்தினால் வழங்கப்படும் சேவை.

1.1□ **‘வலையமைப்பு’** என்பது சந்தாதாரருக்கு சேவைகளை வழங்கும் பொருட்டு மொபிடெல் தாபனத்தினால் பாவிக்கப்படும் தொலைத் தொடர்ப்பு வலையமைப்பாகும்.

1.11. **‘ஆள்நிலை தரவு’** என்பது சந்தாதாரரினால் மொபிடெல் தாபனத்திற்கு வழங்கப்பட்ட சந்தாதாரரின் விவரங்கள் அல்லது அப்படியான தரவுகள் உருவாக்கப்பட்டு, கிரமபடுத்தப்பட்டு , மற்றும் சந்தாதாரரையிட்டு உள்ளடங்கலாக, பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்ததிகதி, ஆள் அடையாள அட்டை இலக்கங்கள், அழைப்புதரவு இலக்கங்கள், போக்குவரத்து தரவு , அமைவிடத்தரவு மற்றும் மீ தரவு, கடன் அட்டை விவரங்கள், விலைப்பட்டியல் ஆவணங்கள், குரல் பதில், மின் அஞ்சல் முகவரிகள், வாடிக்கையாளர் சேவையினால் பதிவு செய்யப்பட்ட தரவுகள் மற்றும் ஏற்புடைத்தான சட்டவாக்கங்களின் கீழ் தேவைப் படுவதான அத்தகைய தகவல்கள் மற்றும் இலங்கையில் உள்ள ஒழுங்கு விதிகள் உட்பட ஆனால் இவற்றிற்கு மாத்திரம் கட்டுபட்டதாக அமையாது என்பதாகும்.

1.12. **‘சேவை’** எனக் கருதப்படுவது, சந்தாதாரருக்கும் மொபிடெல் தாபனத்தினால் வழங்கப்படும் ஏதும் தொலைத்தொடர்பு சேவையாகும். சேவைகளுக்காக செலுத்த வேண்டியவை என்பன, முற்பணமாக மாதாந்த சந்தா கட்டணம், சேவைகளுக்கான தற்பொழுது வளர்ப்பில் உள்ள கட்டணம், இணைப்புக்கட்டணம் அல்லது மீள் இணைப்புக்கட்டணம் ஏதும் இருப்பின் மொபிடெல் தாபனத்தினால் விதிக்கப்பட்டிருக்கும் ஏதும் தண்டப்பணம் வரிகள், அரச, மாநகரசபை, மாகாணசபை அல்லது இவை போன்ற அரச முகவர்களினால் அறவிடப்படுபவை உட்பட இதனுள் அடங்கும்.

1.13 **‘சிம்’** எனப்படுவது, ஒருங்கிணை சுற்றமைப்புத்தேக்கம் செய்யும் குறிப்பிட்ட பாவனைத்தரவு என்னும் இனங்காணும் கூறானது ஓர் ஒத்திசைவான கருவியுடன் பாவிக்கப்படும் போது வலையமைப்பிற்குள் நுழைவதற்குப் பாவிக்கப்படலாம் என்னும் கருவியாகும்.

1.14 ‘**சந்தாதாரர் ’** என்பது ஏதாவது சட்ட அல்லது இயற்கையான ஆள் ஒரு கணக்கைப் பதிவு அல்லது செயற்பாடாக்குவது என்பது ஆகும். வேறு ஏதாவது வகையில் வரைவிலக்கணம் கூறப்பட்டால் அன்றி ஒரு வாடிக்கையாளருக்கான குறிப்பீடு சந்தாதாரர் எனக் கருத்துப்பட வேண்டும்.

**2. செல்லுபடியாந்தன்மையின் காலவரையறை**

2.1 இவ் நியதிகளும் நிபந்தனைகளும் சந்தாதாரருக்கான சேவைகள் ஆரம்பமாகும் திகதியிலிருந்து ஆரம்பமாகி இரண்டில் ஒரு தரத்தவரால் பொநிநி. என்பவற்றிற்கு அமைவாக இரண்டில் ஒரு தரத்தவரால் முடிவுறுத்தப்படும் வரை செல்லுபடியானதும் வலுப்பெற்றதுமாக இருக்கப்படல் வேண்டும். எது எப்படியிருப்பினும் சேவையை முடிவுறுத்தல் ஆனது சந்தாதாரர் மொபிடெல் தாபனத்திற்கு கொடுப்பனவு செய்யப்படவேண்டிய ஏதும் மீந்துள்ள கொடுப்பனவுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டதாக கருத்து கொள்ளப்படலாகாது.

**3. கட்டணங்கள் மற்றும் சேவை வரவுகள்**

3.1.1 அழைப்புக்கள்: அலகுகள் நிமிடங்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்த நிமிடத்தில் முழுமைப்படுத்தல் அல்லது அலகுகள் வினாடியை அடிப்படையாகக் கொண்டு, எதுவோ ,அதுவாக .

3.1.2 எஸ்எம்எஸ் / எம்எம்எஸ் :தகவல்களின் எண்ணிக்கை அடிப்படையில்

3.1.3 தரவு: ஒரு பொதி அடிப்படையில் (அடுத்த கிலோபைற்றில் முழுமைப்படுத்தப்பட்டு, 1□ கிலோபைற்றில், மேகாபைற்றில்)

3.1.4 மொபிடேல் தாபனத்தினால் காலத்திற்கு காலம் வழங்கப்படும் பிற சேவைகள் .

3.2 சேவைக்கொடுப்பனவு கடன் எல்லையானது, மொபிடெல் தாபனத்தின் தற்றுணிபு மற்றும் மொபிடெல் தாபனத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே சந்தாதாரருக்கு வழங்கப்படும். சேவைகளின் தடங்கல்களைத் தவிர்க்கும் பொருட்டு சேவைக்கொடுப்பனவு தொகையைக் கடன் எல்லைக்குக் குறைந்ததொகைக்குக் கொண்டுவரும் நோக்கில் இடைக்கால கொடுப்பனவோன்றைக் கொடுப்பனவு செய்யும் படி சந்தாதாரர் கோரப்படுவார்.

3.3 மொபிடெல் தாபனத்தினால் சந்தாதாரருக்கு வழங்கப்பட்ட கணக்கறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அல்லது விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் உரிய கட்டணத்தை அல்லது / மற்றும் மொபிடெல் தாபனத்தினால் சந்தாதாரரிடமிருந்து கோரப்படும் சேவைகளுக்கான உரிய கொடுப்பனவை உரிய தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னரோ சந்தாதாரர் தவறாது கொடுப்பனவு செய்யவேண்டும்.

3.4 சேவைகளுக்கான விலைப்பட்டியல் சுழற்சியானது காலத்திற்குக்காலம் மொபிடெல் தாபனத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதன் பிரகாரம் கணக்கறிக்கைகள் அல்லது விலைப்பட்டியல் சந்தாதாரருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். எதையிட்ட காரணத்தைக்கொண்டும் கணக்கறிக்கையோ அல்லது விலைபட்டியலோ கிடைக்கப்பெற்றிராத பட்சத்தில் மீந்துள்ள சேவைக்கொடுப்பனவு பற்றி விசாரித்தறிந்து மீந்துள்ள உரிய கொடுப்பனவைச் செய்வது சந்தாதாரரினது தலையாய கடமையாகும்.

3.5 சேவையின் பொருட்டான கொடுப்பனவு ஏதும் உரிய கொடுப்பனவு திகதிக்கு மேல் மீந்திருக்குமாயின் அக் கொடுப்பனவைச் செலுத்தும்வரையான காலம் வரைக்கும் சந்தாதாரர் தண்டபணமாக மாதமொன்றிற்கு இரண்டு சத விகிதத்தை (2%) அல்லது மொபிடெல் தாபனத்தினால் நியமிக்கப்படும் வேறு ஏதும் விகிதத்தை/ தொகையை சந்தாதாரர் மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யவேண்டும்.

3.6 உரித்தான திகதியில் சேவைகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறும் சந்தாதாரருக்கு உரித்தான கழிவு என்பனவற்றை மீளப்பெறும் உரிமையை மொபிடெல் தாபனம் கொண்டுள்ளது.

3.7 விலைப்பட்டியல் சம்பந்தப்பட்ட ஏதும் விசாரணைகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட வேண்டும் .

- முன் கொடுப்பனவு சம்பந்தமாக, விலைப்பட்டியல் திகதியின் 3□ நாட்களுக்குள்
- பின் கொடுப்பனவு சம்பந்தமாக, சேவைகளைப் பெற்றுக்கொண்ட 3□ நாட்களுக்குள். அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் எந்த வித விசாரணைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3.8. சேவைகளின் பொருட்டான ஏதும் கொடுப்பனவுகளை பணவைப்புகளிலிருந்து (கூற்று 4 இல் விளக்கப்பட்டவாறு) அதாவது சந்தாதாரரினால் கொண்டிருக்கப்படும் வேறு எந்தவொரு கணக்கின் கீழானதான பணவைப்பிலிருந்தும் அறவிடுவதற்கான உரித்துரிமையை மொபிடெல் தாபனம் கொண்டுள்ளது.

3.9 மேற்போந்தவை எது எவ்விதமாக இருப்பினும், பொநிநி இன் ஏற்புடைத்தான ஏற்பாடுகளுக்கமைவாக கொடுப்பனவுகள் செய்யப்படாதவிடத்து, மொபிடெல் தாபனம் அதன் சேவைகளை இடைநிறுத்தவோ, முழுமையாக நிறுத்தவோ அல்லது பகுதியாக நிறுத்தவோ முடியலாம்.

**4. பண வைப்பு**

4.1 சேவைக்கான விண்ணப்பத்தை ஏற்றுகொண்டதன் பின்னர் மற்றும்/ அல்லது மொபிடெல் தாபனம் சந்தாதாரரை மொபிடெல் தாபனத்தினால் தீர்மானிக்கப்படுவதான பணத்தொகையை/ பெறுமதியை வைப்புசெய்யும் படி கோரலாம்.

4.2. சந்தாதாரர் அப்படியான பணவைப்பை மற்றும் / அல்லது மேலதிகமான பணவைப்பை வைப்புச்செய்யத் தவறுமிடத்து மொபிடெல் தாபனம் ஆனது அப்படியான பணவைப்பை மற்றும் / அல்லது மேலதிகமான பணவைப்பை மேற்கொள்ள தவறுமையின் காரணமாக சேவையை இடைநிறுத்தவோ அல்லது சேவையை முழுமையாக நிறுத்தவோ அல்லது பகுதியாக நிறுத்தவோ மொபிடெல் தாபனத்திற்கு முடியலாம்.

4.3 சேவை நிற்பாட்டப்பின்னர், சேவையினால் மீந்திருக்கும் சகல நிலுவைகளையும் சேவைக் கொடுப்பனவுகளையும் குறிப்பிட்ட பண வைப்புகளிருந்து மொபிடெல் தாபனம் அறவிட வேண்டுமென்பதுடன் மிகுதியேதும் இருப்பின் அது சந்தாதாரருக்கு பண மீளளிப்புச் செய்யப்படும்.

**5. சந்தாதாரரின் கடப்பாடுகள்**

**5.1** ஏனையவை அடங்கலாக சந்தாதாரர்:

I. பொநிநி. இல் உள்ள சரத்துக்களின் பிரகாரம் சேவைகளின் பொருட்டான சகல கொடுப்பனவுகளையும் செலுத்தவேண்டும்.

II. சேவைகள் ஏதும் சட்ட விரோதமான, நெறிகெட்ட, ஆபாசமான, அவதூறான, இழிவான, தொல்லையான , சட்ட விரோதமான, இருதய அறுவைசிகிச்சையை நிற்பாட்டல் போன்றவற்றிற்கு சேவையைப் பாவிப்பாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் சேவையானது அழைப்புக்கள், தரவு அல்லது பிற தகவல்கள், சட்டரீதியாக தொலைத்தொடர்ப்பு தேவைகள் உட்பட ஆனால் இவற்றிற்கு மாத்திரம் வரையறுக்கப்படாது, எண்ண எதிரலை மற்றும் செய்திகளை செலுத்தலுக்கானவற்றிற்கு மாத்திரம் பாவிக்கப்பட வேண்டும்

III. ‘சிம்’ ஐ இழத்தல் அல்லது களவாடப்படல் அல்லது சேதம் அடைதல் அல்லது அதன் பகுதி ஏதும் இவற்றுக்குள்ளாதலிருந்து தவிர்ப்பதற்கான சகல முன்னெச்சரிக்கைகளும் மேற்க்கொள்ளப்பட வேண்டும். இழப்பு அல்லது களவு அல்லது சேதம் அல்லது அதன் பகுதி இவற்றிற்குள்ளாக நெருமிடத்து இது சம்பந்தமாக மொபிடெல் தாபனத்திற்கு உடனடியாக எழுத்து மூல அறிவித்தல் செய்யப்படவேண்டும் . எது எவ்வாறாயினும், குறிப்பிட்ட

இழப்பை அறிவிக்கும் கால வரையிலான சேவைகளுக்கான சகல மீந்துள்ள கொடுப்பனவுகளுக்கும் சந்தாதாரர் பொறுப்புடைத்தவராவார்.

IV. சந்தாதாரரினது கருவிபொருத்தல், உடமை பெற்றிருத்தல், பாவித்தல் அல்லது சேவையை பேணுதல், 'சிம் ' மற்றும் / அல்லது கருவியை பேணுவதினால் ஏற்படும் ஏதும் இழப்பு, செலவு , சேதம் அடைதல் மற்றும் பொறுப்புக்கள், அது என்னவாக இருப்பினும் இதன்பால் எழும் ஏதாவது இழப்பு, சேதம், மற்றும் பொறுப்புகளுக்கு, நட்டோத்தரவாதம் மற்றும் பொறுப்பு கூறுதல் அற்றதாக மொபிடெல் தாபனம் இருக்க வேண்டும்.

V. இணைப்பு சம்பந்தப்பட்ட மற்றும் அதன் பாவனை தொடர்பான ஏதும் மோசடி, களவு, இழப்பு, அதிகாரம் பெறாத அணுகல் அல்லது சட்டவிரோதமான வேறு ஏதாவது செயற்பாடுகளைக் கண்டுபிடிக்குமிடத்து அதையிட்டு உடனடியாக எழுத்து மூலமாக மொபிடெல் தாபனத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் அதையிட்டு சம்பந்தப்பட்ட சட்டத்தை வலியுறுத்தும் அதிகாரிகளுக்கும் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.

VI. சந்தாதாரருக்கு சேவையை இயலச்செய்யும் பொருட்டு இணைப்பை வழங்கும் வேளையில் வழங்கப்படும் 'சிம்' மற்றும் இலக்கம் என்பன மொபிடெல் தாபனத்திற்குச் சொந்தமானது என்பதுடன் சேவையானது செயற்பாடற்று இருப்பின் அல்லது காலத்திற்குக் காலம் மொபிடெல் தாபனத்தினால் தீர்மானிக்கப்படும் கால எல்லைக்கு சேவை துண்டிக்கப்பட்டிருக்குமாயின், அந்த இலக்கத்தை பிறிதொரு சந்தாதாரருக்கு மீள வழங்கும் உரிமையை மொபிடெல் தாபனம் கொண்டுள்ளது.

VII. சேவைகளின் பாவனை மற்றும் ஏதும் கட்டணங்கள் மற்றும் சேவையின் பாவனை ஊடாக ஏற்பட்ட ஏதும் கட்டணங்கள், அவை எவ்வகையாக இருப்பினும் அதற்கான முழுப்பொறுப்பையும் சந்தாதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

VIII. உற்பத்திக் குறைபாடு இருக்கும் பட்சத்தில் மாத்திரமே பதில் 'சிம்'/ 'சிம்களை' பண அறவீடு ஏதுமின்றி மொபிடெல் தாபனம் வழங்கும்.

IX. சேவை இணைப்பின் பொருட்டு பாவனைப்படுத்த உத்தேசிக்கப்பட்ட சாதனம் மொபிடெல் வலையமைப்புடன் இசைவுடையதா என்பதை மொபிடேல்

தாபனத்திடமிருந்து சந்தாதாரர் ஊர்சிதப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் ஏற்படும் ஏதும் இசைவுடமையற்ற தன்மைக்கு மொபிடெல் தாபனம் பொறுப்பேற்க மாட்டாது.

x. சந்தாதாரர் மாறுதல், பெயர், தேஅஅ, வீட்டு மற்றும் விலைப்பட்டியல் முகவரிகள் உட்பட சந்தாதாரரின் ஆள்நிலை தரவில் மாற்றம் ஏதும் ஏற்படின் மொபிடெல் தாபனத்திற்கு அறிவிக்கவும்.

xi. சாதனங்கள் மற்றும் 'சிம்' களை இலங்கையிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை மீறாத வண்ணம் சொந்தம் மற்றும் உடமை பெற்றிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும்.

xii. ஆள் மாறாட்டம் செய்து ஒரு இணைப்பை / 'சிம்' ஐ பெற வேண்டாம்.

xiii. உடன்படிக்கையொன்று வலுவிருக்கும் காலத்தில் மொபிடெல் தாபனத்தினால் குறிப்பிட்ட செயற்பாடுகளைத் தவிர்த்து இணைப்பை 'சிம்' ஐ பிறிதொருதரத்தவருக்கு அவரது பாவனையிலிருந்து மாற்றம்செய்யலாகாது.

## 6 . மொபிடெல் தாபனத்தின் உரிமைகளும் கடப்பாடுகளும்

6.1 மொபிடெல் தாபனத்தின் கடப்பாடானது பொறிநி. இற்கு அமைவாக நியாயமான முயற்சிகளை மேற்கொண்டு சேவையை வழங்குவதாகும்.

6.2 சேவையானது தற்போது பாவனையில் இருப்பதைப்போன்று அல்லது கிடைப்பதைக்கொண்டு சேவை வழங்கப்படுகின்றது. சேவையின் தராதரம், கிடைக்கப்பெறுகை, பாதுகாப்பு , காலஎல்லை, அணுகுத்தன்மை, தடங்கலற்ற பாவனை, சரியாக இருத்தல் , வேகம் அல்லது முழுமைத்தன்மை என்பனவின் பொருட்டான சேவை சம்பந்தமாக மொபிடெல் தாபனம் வெளிப்படையாக அல்லது உட்கிடக்கையாக எதுவித பிரதிநிதித்துவத்தையோ அல்லது உத்தரவாதத்தையோ சந்தாதாரருக்கு மேற்கொள்வதில்லை.

6.3 உட்பிரதேச திணை நிலம், வானிலை, மின்காந்த தலையீடு, ஒழுங்கமைப்பு மற்றும் ஆதார நிலையத்தை பல பாவனையாளர்கள் பாவித்தல், சாதனத்தின் ஒத்திசைவுத்தன்மையின்மை, மொபிடெல் தாபனத்தின் கட்டுப்பாட்டில் அல்லாத

மூன்றாம் தரத்தவரது சேவை சந்தாதாரரினால் பாவிக்கப்படுவது போன்றவை காரணமாக சேவைகள் பாதிக்கப்படலாம் என்னும் சூழலில் தடையற்ற சேவையொன்றினை வழங்குவது மொபைல் தகவல் தொழில் நுட்பத்தின் நிலையுறுதியற்ற தன்மையின் காரணமாக இயலாத செயற்பாடு என்பதையிட்டு சந்தாதாரர் ஒப்புதல் கொள்கின்றார்.

6.4. எவ்வாறாயினும் நிகழப்பட்ட (வேறொன்றின் விளைவாக ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம் உட்பட) ஏதும் இழப்பு அல்லது சேதம், அது பாதிக்கப்பட்டிருக்கலாம் அல்லது இன்னாத விளைவை ஏற்படுத்தியிருக்கலாம் அல்லது சேவையின் பால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அது ஏற்பட்டிருக்கலாம். அல்லது மொபிடெல் தாபனத்தின் சார்பான தோல்வி அல்லது விடுபாடு, இவையெதுவோ அவையெவ்வாறாக இருப்பினும் மொபிடெல் தாபனம் எந்த வகையான விதத்திலும் இவை சம்பந்தமாகப் பொறுப்பேதும் அற்றதாக இருக்க வேண்டும்.

6.5 மொபிடெல் தாபனம் சேவைக்குத் தேவையெனக் கருதும் அல்லது சேவைக்கு நன்மை பயக்கும் எனக்கருதுமிடத்து சந்தாதாரருக்கு அறிவித்தலேதுமின்றி சேவைக்கான திருத்தங்கள் எதனையும் மேற்கொள்ள முடியும்.

6.6 ‘சிம்’ ஐ பாவிக்கும் போது சாதனத்திற்கு ஏதும் சேதம் ஏற்படின் மொபிடெல் தாபனம் அதற்கு பொறுப்புக் கூறுவதாக அமைய மாட்டாது.

6.7 சேவையின் பொருட்டு மீந்திருக்கும் ஏதும் கொடுப்பனவுகளை மொபிடெல் தாபனத்திற்கும் சந்தாதாரருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட பிறிதேதும் உடன் படிக்கையிலிருந்து எதிரீடு செய்யமுடியும் மற்றும்/அல்லது பிறிதொரு உடன்படிக்கையின் சார்பில் மீந்திருப்பதான ஏதும் கொடுப்பனவு தற்போதைய உடன்படிக்கையிலிருந்து அறவிடப்பட முடியும்.

6.8 மொபிடெல் தாபனத்திற்கு பொறிநி. இன் கீழான சரத்துக்களின் பிரகாரம் கொண்டுள்ள உரிமைகளுக்கு ஏதும் பங்கபாதமின்றி சேவைக்கான கொடுப்பனவுகளை மற்றும்/ அல்லது பணவைப்பு அல்லது மேலதிக பணவைப்புகளுக்கான கொடுப்பனவுகளைச் செய்ய தவறுமிடத்து, மொபிடெல் தாபனம் அதன் சேவையை இடைநிறுத்தம் செய்யலாம் அல்லது சேவையை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ துண்டிக்கலாம்.

6.9 சேவையின் செயற்பாடந்தன்மை ஏற்படும் பட்சத்தில் சந்தாதாரர் அதை செயற்பாடாக்குவதான விண்ணப்பத்தை மேற்கொள்ள வேண்டும். மற்றும் மொபிடெல் தாபனத்தினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படுவதான மீள் செயற்பாட்டிற்கான கொடுப்பனவோன்றை சந்தாதாரர் செலுத்தும் பட்சத்தில்

இணைப்பை மீள் செயற்பாடாக்கவோ அல்லது சேவையின் மீள் செயற்பாட்டை மறுக்கவோவான உரிமையை மொபிடெல் தாபனம் கொண்டுள்ளது.

**7. தரவு பாதுகாப்பு மற்றும் அந்தரங்கம்**

மொபிடெல் தாபனத்துடன் ஒரு கணக்கை பதிவு செய்வதன் மூலம் அல்லது பின்வரும் சேவைகளின் பொருட்டு சந்தாதாரருக்கு சேவைகள் கிடைக்கத் தக்கதாக்கும் காலத்தில் மொபிடெல் தாபனத்தினால் உற்பத்தியாக்கப்படும் தனியாள் தரவுகளை ஒன்று சேர்த்தலுக்கு, செயல்முறைபடுத்தலுக்கு , சேகரிப்பதற்கு மற்றும் பகிர்ந்து கொள்வதற்கு சந்தாதாரர் இணக்கம் தெரிவிக்கின்றார்.

அ. சந்தாதாரருக்கு சேவைகளை பயன்பாடாக்குதல்;

ஆ.வாடிக்கையாளர் அக்கறை பிரிவினால் சந்தாதாரின் கணக்கை முகாமைப்படுத்தல்;

இ. சந்தாதாரர் வெளிப்படையாக நிறுத்திக்கொள்ள முடிவு செய்தாலன்றி, சந்தை ஆய்வு மற்றும் தகவல்களை அறிமுகப்படுத்தல்,மேம்பாடாக்கல் மற்றும் / அல்லது மொபிடெல் தாபனத்தின் சேவைகள் மற்றும் / அல்லது கணினி இணையத்தள வலையமைப்பு என்பவற்றின் பாவனை மற்றும் முன்னுரிமைகளின் அடிப்படையில் சந்தை ஆய்வு மற்றும் சந்தாதாரரின் விபர தொகுப்புகள்;

ஈ. மோசடிகள், வெள்ளைப்பணமாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியீட்டல் என்பனவற்றைத் தவிர்ப்பதும் கண்டுபிடித்தலும்;

உ. ஏற்புடைத்தான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு பணிந்து நடத்தல்.

7.2 மொபிடெல் தாபனத்தின் குழுவினர் மற்றும் வெளிப்பகுதியைச் சேர்ந்த தனித்துவம் கொண்டவர்களாகிய மொபிடெல் தாபனத்தின் நம்பிக்கையான வணிக ஒப்பந்த பங்குதாரர் ஆகிய பெறுமதிசேர் சேவை ஏற்பாட்டாளர்கள் மற்றும் மொபிடெல் மற்றும்/ அல்லது சேவை மேன்மை சம்பந்தப்பட்ட தகவலின் நிமித்தம் இப்படியான வணிக பங்காளிகளுடன் கணினி இணையத்தளத்தில் சந்தாதாருடன் தொடர்பு வைத்திருக்க கூடியதாகிய அயல் தனித்துவம் கொண்ட கம்பனிகளுடன் மொபிடெல் ஆனது தனியாள் தரவைப் பகிர்ந்து கொள்ளக்கூடும் என்பதற்கு சந்தாதாரர் இணங்குகின்றார்.

7.3 வெளிநாட்டு விநியோகஸ்தர்களினால் சேவைகள் கிடைக்கக்கூடியதாக்கல் மேற்கொள்ளப்படுகையில் அவர்களுக்கு ஏற்புடைத்தான தரவு முகாமைத்துவ

தேவைகளின் பொருட்டு பிற நாடுகளுக்குத் தனியாள் தரவை மாற்றலாம் என்பதற்கு சந்தாதாரர் இணங்குகின்றார்.

**8. சர்வதேச திரிதல் சேவை**

8.1 சர்வதேச திரிதல் சேவையைக் குறிப்பிட்டதொரு சந்தாதாரர் பாவிப்பதற்கு உரித்துரிமை கொண்டிருக்க வேண்டும் என்னும் உரிமையைக் கொண்டுள்ளவரா அல்லது இல்லையா என்னும் தீர்மானத்தை மேற்கொள்வதற்கான தற்றுணிபை மொபிடெல் தனக்கு ஒதுக்கியுள்ளது.

8.2 பின் கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கான செயற்பாடாக்கல் ஏற்பாடு சந்தாதாரரின் பிரிவை பொறுத்து வேறுபடும். முன்கொடுப்பனவானது சந்தாதாரருக்கான குரல் மற்றும் தரவு திரிதல் சேவைகள் இரண்டும் முன் செயலாக்கம் செய்யப்படுகின்றது. திரிதல் சேவையானது செயற்படுகின்றதா இல்லையா என்பதை வாடிக்கையாளர் இலங்கையிலிருந்து வெளியேற முன்னர் சந்தாதாரர் அக்கறை பிரிவிலிருந்து கேட்டறிந்து கொள்ள வேண்டும். குரல், எஸ்எம்எஸ் மற்றும் தரவு திரிதல் என்பன மூன்று வெவ்வேறு தனித்துவமான சேவைகள் என்பதுடன் அவற்றிற்கு வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றனவென்பதையிட்டு சந்தாதாரர் இணக்கம் தெரிவிக்கின்றார்.

8.3 சர்வதேச திரிதல் சேவையைப் பிரயோகிக்கும் சந்தாதாரர் சேவைகள் சம்பந்தமான பிறிதேதும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலாக பொநிநி. க்கு உட்பட்டவராவார்.

8.4 சர்வதேச திரிதல் சேவையைப் பாவிக்கும்போது, மொபிடெல் தாபனத்தினால் மற்றும்/ அல்லது சந்தாதாரர் தொலைபேசி அழைப்புக்களை/ செய்திகளைப் பரிமாறும் போது அல்லது பெறும் நாட்டினது தொலைத்தொடர்ப்பு அதிகாரிகள் சுமத்தும் தீர்வைகள் மற்றும் கட்டணங்கள் பிரகாரம் சந்தாதாரர் உருவாக்கும் மற்றும் பெறும் அழைப்புக்கள் மற்றும் செய்திகள் அனைத்திற்கும் சந்தாதாரர் கொடுப்பனவு செய்ய வேண்டும்.

8.5 சந்தாதாரர் சர்வதேச திரிதல் சேவையைப் பிரயோசனப்படுத்தும் போது மேற்கொள்ளும் தரவு மேலேற்றம் மற்றும் இறக்கம் சார்பான மொபிடெல் தாபனத்தினால் மற்றும்/ அல்லது சந்தாதாரர் தரவை உபயோகிக்கும் நாட்டினது அதிகாரிகள் சுமத்தும் தீர்வைகள் மற்றும் கட்டண பிரகாரம் , சந்தாதாரர் சகல கொடுப்பனவுகளையும் செலுத்த வேண்டும்.

8.6 ஒருவர் சர்வதேச திரிதல் சேவைக்கான விண்ணப்பத்திற்கு சந்தா செலுத்த முன் அச்சர்வதேச திரிதலுக்கு ஏற்புடைத்தான கட்டணங்களைப் பழக்கப்படுத்தி கொள்ள வேண்டும்.

**9. பாவிக்கப்பட்ட இணைப்புக்களை பணியிட மாற்றம்**

9.1 பாவிக்கப்பட்டதொரு இணைப்பை பணியிட மாற்றம் செய்வதற்கான ஏதும் வேண்டுகோளை ஏற்பது மொபிடெல் தாபனத்தின் தனித்துவ தற்றுணிபு உரிமையிலாக வேண்டும்.

9.2 பாவிக்கப்பட்ட இணைப்பினை மாற்றப்பெறுபவரான சந்தாதாரர், தேவைப்படுவதான ஆவணங்களைச் சமர்ப்பித்து. அவர் ஓர் புதிய சந்தாதாரராக மொபிடெல் தாபனத்தில் புதிய சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளப்படல் வேண்டும்.

**1□. மாற்றங்கள்**

1□.1 கட்டணங்கள் மற்றும் விலைப்பட்டியல் நிபந்தனைகள் மற்றும் நியதிகளை, இங்குள்ள பொது நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மொபிடெல் தாபனத்தின் உத்தியோகபூர்வ கணினி வலையமைப்பில் பிரசுரப்படுத்துவதன் மூலம் மற்றும் / அல்லது இகுபநு.(IVR) சேவை மூலமாகச் செயற்பட்டு அறிவித்தல் தருவதன் மூலம் மாற்றுவதற்கான உரிமையை மொபிடெல் கொண்டுள்ளது.

1□.2 ஏதும் மாற்றங்களின் பின்னர் சந்தாதாரரின் இச்சேவைகளின் தொடர்ந்த பாவனையானது , சந்தாதாரர் இம்மாற்றங்களுக்கு ஒத்திசைவாகியுள்ளார் எனக் கருத்து கொள்ளப்படும்.

1□.3 இவ்வகையான மாற்றங்களின் பின்னர் சந்தாதாரரின் இச் சேவைகளின் தொடர்ந்த பாவனையானது, சந்தாதாரர் இம்மாற்றங்களுக்கு ஒத்திசைவாகியுள்ளார் எனக் கருத்துக் கொள்ளப்படும்.

**11. தற்காலிக நீக்கம் / செயலிழப்பு / சேவை நீக்கம்**

11.1 பிறிது ஏதும் உரிமை அல்லது பரிகாரத்திற்குப் பங்கபாதம் ஏதுமின்றி மொபிடெல் தாபனமானது கீழே குறிப்பிடப்படும் ஒன்றோ அல்லது பல காரணங்களின் நிமித்தம் சேவையை அறிவித்தலேதுமின்றி இடைநிறுத்த அல்லது செயலிழக்கச் செய்யும் உரிமையை மொபிடெல் கொண்டுள்ளது.

I. மொபிடெல் தாபனத்தின் சேவைகளின் பொருட்டுக் கொடுபட வேண்டிய ஏதும் கொடுப்பனவுகள் நிலுவைகள் இருப்பின்;
II. தேவையேற்படும் போது சந்தாதாரர் பண வைப்பு / களை மற்றும்/ அல்லது மேலதிக பண வைப்பு / களை மேற்கொள்ளத் தவறுமிடத்து;
III. சந்தாதாரருக்கு எதிராக கையறுநிலை வழக்கொன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில்;

IV. சந்தாதாரர் ஓர் கூட்டுத்தாபனம் அல்லது ஓர் கம்பனி என்பதாயின் மற்றும் அப்படியான சந்தாதாரின் மூடிவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது அல்லது அப்படியான சந்தாதாரரின் உடமைகளை முகாமைத்துவப்படுத்துவதற்கு அதைப் பெறுபவர் ஒருவர் நியமிக்கப்படுகையில்;

V. சந்தாதாரர் பொநிநி. இன் அல்லது சேவை சம்பந்தமான பிறிதேதும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மீறியுள்ளார் என மொபிடெல் கருத்துக்கொள்ளுமிடத்து,

VI. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையகம் (தொஒஆ./ TRC), அதனிடமிருந்து அல்லது பிறிதொரு சட்ட பூர்வ அதிகார சபையிடமிருந்து மொபிடெல் தாபனத்திற்கு பணிப்பொன்று கிடைக்கப்படுமிடத்து,

11.2 சந்தாதாரர் இங்கு குறிப்பிட்டவை சம்பந்தப்பட்ட மற்றும் சேவைகளுக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் மீந்திருக்கும் ஏதும் கொடுப்பனவுகளை முழுமையாகச் செலுத்துவதன் அடிப்படையில் சந்தாதாரர் ஏழு (7) வேலை நாட்களுக்குக் குறையாத அறிவித்தலை மொபிடெல் தாபனத்திற்குக் கொடுத்துச் சேவையை முடிவுறுத்த முடியும்.

11.3 சேவை ஏற்பாடாக்கப்பட்ட பின்னர்; பாதுகாப்பு, துர்பிரயோகத்தன்மை மற்றும்/ அல்லது சந்தாதாரரின் நாணயத்தகைமை மற்றும் வேறேதும் காரணங்கள் உட்பட, ஆனால் சேவை நியதிகளுக்கமைவாக மற்றும் பொநிநி சரத்துகளின் மீறுகை சம்பந்தப்பட்ட கொடுப்பனவு என்பவற்றிற்குக் கட்டுப்பாடற்று ஏதும் சேவை விண்ணப்பத்தை மற்றும் / அல்லது சேவை நிறுத்துகையை அறிவித்தல் ஏதுமின்றி மறுப்பதற்கான உரிமையை மொபிடெல் கொண்டுள்ளது.

**12. சேவை நீக்கம், தற்காலிக நீக்கம் மற்றும் செயலிழக்கச் செய்தல் வேளைகளின் போது சந்தாதாரரின் பொறுப்புக்கள்**

12.1 சேவை நீக்கம்/ தற்காலிக நீக்கம் / பொநிநி.சரத்துக்களின் பிரகாரம் சேவையை செயலிழக்கச் செய்கையில்; சந்தாதாரர் சேவைகளின் பொருட்டு ஏற்பட்ட சேவை முடிவுறும் / தற்காலிக நீக்கம்/ செயலிழப்பு செய்யும் காலம் வரையான மற்றும் /

அல்லது பிற மீந்திருக்கும் பணத்தொகையை சந்தாதாரர் மொபிடெல் தாபனத்திற்கு கொடுப்பனவு செய்ய வேண்டும்.

12.2 ஏதும் மீந்திருக்கும் சேவையின் பொருட்டான கொடுப்பனவுகளை சந்தாதாரர் கொடுப்பனவு செய்யவேண்டுமென்பதுடன் அவற்றை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது அதனால் ஏற்படும் ஏதும் சட்டவகையான கட்டணங்களையும் சம்பந்தப்படும் பிற கட்டணங்களையும் சந்தாதாரர் கொடுப்பனவு செய்ய வேண்டும்.

12.3 சந்தாதாரர் சேவையை ஏதும்; சட்ட விரோதமான, மோசடியான, நெறியற்ற, ஒழுங்கற்ற மொழி , இழிவான, ஆட்சேபனைக்குரிய தேவைகளுக்கு அல்லது ஏதும் நச்சரிப்பு, எரிச்சற்படுத்தும் மற்றும் தொந்தரவு அல்லது ஒருவருக்கு அச்ச உணர்வை உண்டாக்கும் செயற்பாடுகளுக்கு சந்தாதாரர் பாவிப்பவராயின் மொபிடேல் அதன் சொந்த தற்றுணிபில் சேவையைக் குறைக்கவோ, இடைநிறுத்தம் செய்யவோ அல்லது முடிவுறுத்தவோ முடியலாம். இவ்வகைப்பட்ட சந்தாதாரர் சேவையை தேவையற்றவற்றிற்கு பாவிக்கப்பட்டதன் பலனாக ஏற்படும் ஏதும் குற்றவியல் அல்லது சிவில் பொறுப்புடைமைக்கு முழுப் பொறுப்பாளியாகின்றார் என்பதுடன் அத்தகைய சந்தாதாரர் எப்பொழுதும் அப்படியேற்பட்ட பொறுப்புகளிற்கு மொபிடெல் தாபனத்திற்கு நட்டோத்தரவாதம் அளிக்க வேண்டும்.

## 13 . வலோத்கார தடைகள்

13.1 போர், பயங்கரவாத செயற்பாடுகள், கிளர்ச்சி, வன்மங்கள், கலகங்கள், வேலை நிறுத்தங்கள், கதவடைப்பு , உள்நாட்டு கொந்தளிப்பு, அரசாங்க அதிகாரிகளிடமிருந்தான ஏதும் செயற்ப்பாடுகள் அல்லது பணிப்பு, பொது சேவைகளின் பாதிப்பு, பூகம்பம், வெள்ளம், சுனாமி, புயல், அரிதான காலநிலை அல்லது இயற்கையான அல்லது இயற்கை அனர்த்தம் , விபத்து, நெருப்பு , அல்லது குண்டு வெடிப்பு, மற்றும் / அல்லது மொபிடெல் தாபனத்தின் செயற்பாட்டிற்கு அப்பாற்பட்ட இவையொத்த வேறு ஏதும் செயற்பாடுகளின் காரணமாக சேவையின் செயலிழப்பு அல்லது தடைப்பட நேரிடின் மொபிடெல் தாபனம் அதன் ஏதும் பொறுப்பிலிருந்து விடுவிப்பு அளிக்கப்பட வேண்டும்.

## 14. ஆளுமைச் சட்டங்கள்

14.1 சேவையானது, இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சட்டதிட்ட நிபந்தனைகள் மற்றும் பொருள் கொள்ளல் என்பவற்றிற்கு உட்பட்டவையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் தரத்தவர்கள் இலங்கை நீதிமன்றங்களின் தனித்துவ நியாயாதிக்கத்திற்கு தங்களை சமர்பிக்கின்றனர்.

**15. ஒப்படைக்கப்பட்ட பணி**

15.1 இந்த உடன்படிக்கையின் கீழ் மொபிடெல் தாபனம் அதன் ஏதும் சகல உரிமைகளையும் , கடப்பாடுகளையும் ஓர் மூன்றாம் தரத்தவருக்கு ஒப்படைக்கும் உரிமையை கொண்டுள்ளது. இந்த ஒப்புடைப்பானது சந்தாதாரருக்கு உவந்தது என மொபிடெல் கருதுமிடத்து அப்படியான ஒப்படைப்பையிட்டு சந்தாதாரருக்கு அறிவிக்கப்படும்.

15.2 மொபிடெல் தாபனத்தின் முன் அனுமதியின்றி சந்தாதாரர் இந்த உடன்படிக்கையின் கீழான எந்த உரிமையையும் ஏதும் மூன்றாம் தரத்தவருக்கு ஒப்படைக்கக்கூடாது.

**16 நானாவிதம்**

16.1 இந்த நியதிகள் மற்றும் நிபந்தனையின் கூறுகளுக்கான தலைப்புக்கள் வசதிகளுக்கேற்ப மாத்திரம் அல்லாது நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஏதும் உருவாக்கம் ஆகாது என்பதுடன் அதன்பாலான விளக்கிகூறுதல்களை எவ்வகையிலும் பாதிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

16.2 சந்தாதாரருக்கு மொபிடெல் தாபனத்தினால் மேற்கொள்ளப்படக்கூடியதான ஏதாவது அறிவித்தல் எழுத்து மூலமாக இறுதியாக அறிந்திருந்ததான அவரது முகவரிக்கு அனுப்பிவைக்கப்படலாம் அல்லது மொபிடெல் தாபனத்தின் வலையமைப்பில் அல்லது ஆனால் அதற்கு மாத்திரம் கட்டுப்படுத்தப்படாது எந்தவொரு ஊடகத்தினூடாகவும் பிரசுர அறிவித்தலை மேற்கொள்ளலாம்.

16.3 சேவையின் பொருட்டு மற்றும் / அல்லது இந்த சேவையின் சார்பாகவான சகல தீர்வைகள், வரிகள் உரிய கொடுப்பனவுகள், முத்திரை வரி, விதிப்பனவுகள் அல்லது இன்னோரொத்த பிற ஏதும் கொடுப்பனவுகள் என்பன சந்தாதாரரினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

16.4 தனி ஆட்கள் தேசிய அடையாள அட்டையின் /கடவுசீட்டின் / சாரதி அனுமதிப்பத்திரத்தின் படப்பிரதியோன்றைச் சமர்பிக்க வேண்டும். ஒரு கம்பனி / வணிக நிலையம் ஆயின் கூட்டுருவாக்க அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியொன்றை சந்தாதாரராகப் பதிவு செய்யப்படும் போது சமர்ப்பிக்க வேண்டும் .